000479
10 JAN 2020

சுருக்கம்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் – மதுரை, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களிலுள்ள விளையாட்டு விடுதிகள் – சிறப்பு பழுதுபார்க்கும் பணிகள் மற்றும் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல் – நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (எஸ்2) துறை

அரசாணை (நிலை) எண்.3

நாள்: 06.01.2020
விகாரி – மார்கழி – 21
திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்கவும்:

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய முதன்மைச் செயலாளர் / உறுப்பினர் செயலரின் கடித ந.க. எண்.5242/ஒய்.ஐ.2/ 2019, நாள் 24.09.2019, மற்றும் 24.10.2019.

ஆணை:–

மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் 2019–2020–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது "மதுரை, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள விளையாட்டு விடுதிகளில் ரூ.132.31 இலட்சம் செலவில் சிறப்பு பழுது பார்க்கும் பணிகள் மற்றும் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்படும்" என அறிவித்தார்கள்.

2. இவ்வறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய முதன்மை செயலாளர் / உறுப்பினர் செயலர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் "மதுரை, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள விளையாட்டு விடுதிகளில் சிறப்பு பழுது பார்க்கும் பணிகள் மற்றும் கூடுதல் வசதிகளை ரூ.132.31 இலட்சம் செலவில் ஏற்படுத்துவது சம்பந்தமாக பொதுப் பணித்துறையிடமிருந்து அறிக்கைகள் மதிப்பீட்டுடன் பெற்று அரசுக்கு அனுப்பி உள்ளார். மேற்குறிப்பிட்ட விளையாட்டு விடுதிகளில் சிறப்பு பழுது பார்க்கும் பணிகள் மற்றும் கூடுதல் வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாக கீழ்க்காணும் விவரங்களை தெரிவித்துள்ளார்.

| Sl. No | Sports Hostel | Description of work | Tentative cost Rs. (Lakhs) | Total Amount Rs. (Lakhs) |
|---|---|---|---|---|
| 1. | Madurai | Providing damaged window in ground floor and netlon arrangements GF & FF on sports hostel building at Madurai | 4.65 | 12.65 |
| | | Providing dobigonna and washing cloth platform in District Sports Hostel at Madurai | 5.00 | |
| | | Providing Paver block arrangements Hostel inner side of the district sports hostel campus at Madurai | 3.00 | |
| 2. | Trichy | Providing New Volleyball court 2 Nos. in Anna Stadium sports hostel at Trichy | 11.75 | 57.66 |
| | | Providing parents reception hall in Anna Stadium sports hostel at Trichy | 14.33 | |
| | | Providing Boxing court with Roof arrangements in Anna Stadium sports hostel at Trichy | 7.44 | |
| | | Providing Paver block arrangements in front of the hostel in Anna stadium sports hostel at Trichy | 1.85 | |
| | | Special repairs to existing Volleyball court in Anna Stadium sports hostel at Trichy | 5.63 | |
| | | Special Repairs to Hockey field Fencing arrangements in Anna Stadium sports hostel at Trichy. | 16.66 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | Thanjavur | Special works to sports hostel block and providing additional compound wall arrangements and Special repair works to Annai Sathya Stadium campus at Thanjavur | 51.00 | 51.00 |
| 4. | Kanyakumari | Special repair works to Toilet, Joineries, Mosquito net and painting in Sports Hostel (G) building in Anna Stadium, Nagarkoil.<br>i. Repairs to doors, windows, steel cup board and mosquito net arrangements<br>ii. Repairs to toilet including closet, pipe lines and toilet doors<br>iii. Repairs to wall finish and painting<br>iv. Safety grill arrangements | 11.00 | 11.00 |
| | | **Total** | **132.31** | **132.31** |

3. எனவே, மதுரை, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள விளையாட்டு விடுதிகளில் சிறப்பு பழுது பார்க்கும் பணிகள் மற்றும் கூடுதல் வசதிகளை ஏற்படுத்த ரூ.132.31 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்குமாறு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய முதன்மை செயலாளர் / உறுப்பினர் செயலர் அவர்கள் அரசினைக் கோரியுள்ளார்.

4. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய முதன்மைச் செயலாளர் / உறுப்பினர் செயலரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, மதுரை, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள விளையாட்டு விடுதிகளில் சிறப்பு பழுது பார்க்கும் பணிகள் மற்றும் கூடுதல் வசதிகளை ரூ.1,32,31,000/ (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து இரண்டு இலட்சத்து முப்பத்து ஓராயிரம் மட்டும்) செலவில் ஏற்படுத்த நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கி ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

“2204–00 விளையாட்டுகளும் இளைஞர் நலப் பணிகளும் – 104 போட்டி விளையாட்டுகளும், விளையாட்டுகளும் – மாநிலச் செலவினங்கள் – JW விளையாட்டு வளாகம் அமைப்பதற்காக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு மானியங்கள் – 309 உதவித் தொகை – 02 மூலதனச் சொத்து உருவாக்குவதற்கான உதவித் தொகை”
(IFHRMS த.தொ.கு.2204 00 104 JW 30902)
(பழைய த.தொ.கு. 2204 00 104 JW 0927)

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுத்துணைப் பணியாகும். இதற்கான சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாராச்செலவு நிதியிலிருந்து முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதித் (வ.செ.பொ.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். அடுத்த துணை மானிய கோரிக்கை வரை தேவைப்படும் சரியான தொகையினைக் கணக்கிட்டு எதிர்பாராச்செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி விதிகள், 1963ன் இணைப்பில் உள்ள படிவம் “அ”வின் படி இவ்வரசாணையுடன் நிதித் (வ.செ.பொ.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் அரசு சார்புச் செயலாளர் , சென்னை – 9 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2019–2020ம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் இதற்கான குறிப்புடன் நிதித் (வ.செ.பொ.1) துறைக்கு அனுப்புமாறு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய முதன்மைச் செயலாளர் / உறுப்பினர் செயலர், மேலே பத்தி 6–ல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி உரிய காசோலையை பெற்ற பின்னர், அதனை வங்கியில் பராமரிக்கப்படும் தன் வைப்பு நிதிக் கணக்கில், முப்படிவ செலுத்துகைச் சீட்டில் முறையாக கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பைக் குறிப்பிட்டு, வைப்பீடு செய்ய வேண்டும்.

‘K வைப்புகள் மற்றும் முன்பணங்கள் (B) வட்டிபெறா வைப்பீடுகள் – 8443 00 உரிமையியல் வைப்பீடுகள் – 800 ஏனைய வைப்புகள் – CH – 801 வரவுகள் – 02 வட்டி பெறாதவை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வைப்புகள்'. (த.தொ.கு 8443 00 800 CH 000D) (வரவுகள்)
(IFHRMS 8443 00 800 CH 80102)
(தன் வைப்பு நிதிக் கணக்கு எண்.61 84513932)

9. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.63787/கல்வி–I/2019, நாள்:26.12.2019–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்க பேரேட்டு எண்.2622 (இரண்டாயிரத்து அறுநூற்று இருபத்து இரண்டு)

(ஆளுநரின் ஆணைப்படி)

தீரஜ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
உறுப்பினர் செயலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை–84.
மாநிலக் கணக்காயர், (CAS) சென்னை– 9.
மாநிலக் கணக்காயர், சென்னை– 18.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை), சென்னை– 18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–9.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை –9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு முதன்மைச் செயலரின் தனிச் செயலர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சென்னை– 9.
அரசு துணைச் செயலாளர் / அரசு சார்புச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சென்னை– 9.
தேசிய தகவல் மையம், தலைமைச் செயலகம், சென்னை – 9.
நிதித்(கல்வி–I/வ.செ.பொ.I/II) துறை, சென்னை–9.
சிறப்பு திட்ட செயலாக்கத் துறை, சென்னை – 9.
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

06.01.2020

பிரிவு அலுவலர்

6/1/2020